ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

# ॥ திவ்ய பிரபந்தம் போற்றும் திருவயோத்தி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ திவ்ய பிரபந்தம் போற்றும் திருவயோத்தி ॥

## பொது தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஶ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ 1 ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ 2 ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம-
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ருʼணாயமேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ 3 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஶ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ 4 ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஶ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஶ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம் ॥ 5 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லுʼப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।

www.prapatti.com

ஶ்வஶ்ரூமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
    த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி॥

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொரு கால்⋆
    சொன்னார் கழற்கமலம் சூடினோம்⋆- முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம்⋆ கீழ்மையினிற் சேரும்
    வழியறுத்தோம்⋆ நெஞ்சமே! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று⋆
    ஈண்டிய சங்கம் எடுத்தூத⋆ வேண்டிய
வேதங்களோதி⋆ விரைந்து கிழியறுத்தான்⋆
    பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி - திருப்பல்லாண்டு

‡பல்லாண்டு பல்லாண்டு⋆ பல்லாயிரத்தாண்டு⋆
    பல கோடி நூறாயிரம்⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!⋆ உன்-
    சேவடி செவ்வி திருக்காப்பு (1)

‡அடியோமோடும் நின்னோடும்⋆ பிரிவின்றி
    ஆயிரம் பல்லாண்டு⋆
வடிவாய் நின் வல மார்பினில்⋆ வாழ்கின்ற
    மங்கையும் பல்லாண்டு⋆
வடிவார் சோதி வலத்துறையும்⋆ சுட-
    ராழியும் பல்லாண்டு⋆
படை போர் புக்கு முழங்கும்⋆ அப்பாஞ்ச-
    சன்னியமும் பல்லாண்டே (2)

வாழாட் பட்டு நின்றீருள்ளீரேல்⋆ வந்து
    மண்ணும் மணமும் கொண்மின்⋆
கூழாட் பட்டு நின்றீர்களை⋆ எங்கள்
    குழுவினில் புகுதலொட்டோம்⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள்⋆

இராக்கதர்வாழ்⋆ இலங்கை-
பாழாளாகப் படை பொருதானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (3)

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து⋆
எங்கள் குழாம் புகுந்து⋆
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி⋆
வந்தொல்லைக் கூடுமினோ⋆
நாடு நகரமும் நன்கறிய⋆ நமோ
நாராயணாயவென்று⋆
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்!⋆ வந்து
பல்லாண்டு கூறுமினே (4)

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி⋆
அசுரர் இராக்கதரை⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த⋆
இருடீகேசன் தனக்கு⋆
தொண்டக் குலத்திலுள்ளீர்! வந்தடி தொழுது⋆
ஆயிர நாமம்சொல்லி⋆
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து⋆ பல்லாண்டு பல்-
லாயிரத்தாண்டென்மினே (5)

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்⋆
ஏழ் படி கால் தொடங்கி⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்⋆ திரு-
வோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி⋆
அரியை அழித்தவனை⋆
பந்தனை தீரப் பல்லாண்டு⋆ பல்லாயிரத்-
தாண்டென்று பாடுதுமே (6)

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி⋆
திகழ் திருச்சக்கரத்தின்⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று⋆

குடிகுடி ஆட்செய்கின்றோம்⋆
மாயப் பொருபடை வாணனை⋆ ஆயிரந்
தோளும் பொழி குருதி-
பாய⋆ சுழற்றிய ஆழி வல்லானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (7)

நெய்யிடை நல்லதோர் சோறும்⋆ நியதமும்
அத்தாணிச் சேவகமும்⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு⋆
காதுக்குக் குண்டலமும்⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து⋆ என்னை
வெள்ளுயிராக்க வல்ல⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப்⋆
பல்லாண்டு கூறுவனே (8)

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை
உடுத்துக்⋆ கலத்ததுண்டு⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன⋆
சூடுமித்தொண்டர்களோம்⋆
விடுத்த திசைக்கருமம் திருத்தித்⋆ திரு-
வோணத் திருவிழவில்⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (9)

எந்நாள் எம்பெருமான்⋆ உன்தனக்கடி-
யோம் என்றெழுத்துப்பட்ட-
அந்நாளே⋆ அடியோங்கள் அடிக்குடில்⋆
வீடுபெற்றுய்ந்ததுகாண்⋆
செந்நாள் தோற்றித்⋆ திருமதுரையுள் சிலை-
குனித்து⋆ ஐந்தலைய-
பைந்நாகத் தலை பாய்ந்தவனே!⋆ உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே (10)

www.prapatti.com

அல்வழக் கொன்றுமில்லா⋆ அணிகோட்டியர் கோன்⋆
    அபிமான துங்கன்-
செல்வனைப்போலத்⋆ திருமாலே! நானும்
    உனக்குப் பழவடியேன்⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று⋆
    நாமம் பல பரவி⋆
பல்வகையாலும் பவித்திரனே!⋆ உன்னைப்
    பல்லாண்டு கூறுவனே (11)

‡பல்லாண்டென்று பவித்திரனைப்⋆ பர-
    மேட்டியை⋆ சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை⋆ வில்லிபுத்தூர் விட்டு-
    சித்தன் விரும்பியசொல்⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்⋆ நமோ
    நாராயணாயவென்று⋆
பல்லாண்டும் பரமாத்மனைச்⋆ சூழ்ந்திருந்-
    தேத்துவர் பல்லாண்டே (12)

## திருவயோத்தி பாசுரங்கள்

### பெரியாழ்வார் திருமொழி (3-9) - என்னாதன்

முடி ஒன்றி⋆ மூவுலகங்களும் ஆண்டு⋆ உன்
    அடியேற்கருள் என்று⋆ அவன் பின் தொடர்ந்த⋆
படியில் குணத்துப்⋆ பரத நம்பிக்கு⋆ அன்று
    அடிநிலை ஈந்தானைப் பாடிப் பற⋆
1 அயோத்தியர் கோமானைப் பாடிப் பற (6)

தார்க்கிளந் தம்பிக்கு⋆ அரசீந்து⋆ தண்டகம்
    நூற்றவள்⋆ சொல் கொண்டு போகி⋆ நுடங்கிடைச்
சூர்ப்பணகாவைச்⋆ செவியொடு மூக்கு⋆ அவள்
    ஆர்க்க அரிந்தானைப் பாடிப் பற⋆
2 அயோத்திக்கரசனைப் பாடிப் பற (8)

காரார் கடலை அடைத்திட்டு⋆ இலங்கை புக்கு⋆
ஓராதான் பொன்முடி⋆ ஒன்பதோடொன்றையும்⋆
நேரா அவன் தம்பிக்கே⋆ நீள் அரசீந்த⋆
ஆராவமுதனைப் பாடிப் பற⋆
3 அயோத்தியர் வேந்தனைப் பாடிப் பற (10)

பெரியாழ்வார் திருமொழி (3-10) - நெறிந்தகருங்குழல்

வார் அணிந்த முலை மடவாய்!⋆ வைதேவீ! விண்ணப்பம்⋆
தேர் அணிந்த அயோத்தியர் கோன்⋆ பெருந்தேவீ! கேட்டருளாய்⋆
கூர் அணிந்த வேல் வலவன்⋆ குகனோடும் கங்கை தன்னில்⋆
4 சீர் அணிந்த தோழமை⋆ கொண்டதும் ஓர் அடையாளம் (4)

மைத் தகு மா மலர்க் குழலாய்!⋆ வைதேவீ! விண்ணப்பம்⋆
ஒத்த புகழ் வானரக்கோன்⋆ உடன் இருந்து நினைத் தேட⋆
அத்தகு சீர் அயோத்தியர் கோன்⋆ அடையாளம் இவை மொழிந்தான்⋆
5 இத்தகையால் அடையாளம்⋆ ஈதவன் கை மோதிரமே (8)

பெரியாழ்வார் திருமொழி (4-7) - தங்கையை மூக்கும்

‡வட திசை மதுரை சாளக்கிராமம்⋆
வைகுந்தம் துவரை அயோத்தி⋆
இடம் உடை வதரி இடவகை உடைய⋆
எம் புருடோத்தமன் இருக்கை⋆
தடவரை அதிரத் தரணி விண்டிடியத்⋆
தலைப்பற்றிக் கரை மரம் சாடி⋆
கடலினைக் கலங்கக் கடுத்திழி கங்கைக்⋆
6 கண்டம் என்னும் கடிநகரே (9)

பெருமாள் திருமொழி (1-8) - மன்னு புகழ்

சுற்றம் எல்லாம் பின் தொடரத்⋆ தொல் கானம் அடைந்தவனே⋆
அற்றவர்கட்கரு மருந்தே⋆ அயோத்தி நகர்க்கதிபதியே⋆



www.prapatti.com

கற்றவர்கள் தாம் வாழும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
7 சிற்றவை தன் சொற் கொண்ட⋆ சீராமா! தாலேலோ! (6)

ஆலின் இலைப் பாலகனாய்⋆ அன்றுலகம் உண்டவனே⋆
வாலியை கொன்றரசு⋆ இளைய வானரத்துக்களித்தவனே⋆
காலின் மணி கரை அலைக்கும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
8 ஆலி நகர்க்கதிபதியே⋆ அயோத்திமனே! தாலேலோ! (7)

## பெருமாள் திருமொழி (1-10) - அங்கண் நெடுமதிள்

‡அங்கணெடு மதிள் புடை சூழ் அயோத்தி என்னும்⋆
அணி நகரத்துலகனைத்தும் விளக்கும் சோதி⋆
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி⋆
விண் முழுதும் உயக் கொண்ட வீரன் தன்னைச்⋆
செங்கண் நெடுங்கரு முகிலை இராமன் தன்னைத்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
எங்கள் தனி முதல்வனை எம் பெருமான் தன்னை⋆
9 என்று கொலோ கண் குளிரக் காணும் நாளே (1)

அம்பொனெடு மணி மாட அயோத்தி எய்தி⋆
அரசெய்தி அகத்தியன்வாய்த் தான் முன் கொன்றான்
தன்⋆ பெருந் தொல் கதைக் கேட்டு மிதிலைச் செல்வி⋆
உலகுய்யத் திரு வயிறு வாய்த்த மக்கள்⋆
செம் பவளத் திரள் வாய்த் தன் சரிதை கேட்டான்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
எம் பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால்
10 பருகுவோம்⋆ இன் அமுதம் மதியோம் இன்றே (8)

## தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பள்ளியெழுச்சி

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்⋆
வேய்ங்குழல் ஓசையும் விடை மணிக் குரலும்⋆
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள்⋆

இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை⋆
வாட்டிய வரிசிலை வானவரேறே!⋆
மா முனி வேள்வியைக் காத்து⋆ அவபிரதம்
ஆட்டிய அடு திறல் அயோத்தி எம் அரசே!⋆
11 அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (4)

### பெரிய திருமொழி (10-3) - ஏத்துகின்றோம்

கவள யானை பாய் புரவித்⋆ தேரோடரக்கர் எல்லாம்
துவள⋆ வென்ற வென்றியாளன்⋆ தன் தமர் கொல்லாமே⋆
தவள மாட நீளயோத்திக்⋆ காவலன் தன் சிறுவன்⋆
12 குவளை வண்ணன் காண ஆடீர்⋆ குழமணி தூரமே (8)

### திருவாய்மொழி (7-5) - கற்பார்

‡கற்பார் இராம பிரானை அல்லால்⋆ மற்றும் கற்பரோ⋆
புற்பா முதலாப்⋆ புல்லெறும்பாதி ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும்⋆ சராசரம் முற்றவும்⋆
13 நற்பாலுக்குய்த்தனன்⋆ நான்முகனார் பெற்ற நாட்டுளே (1)

### தேசிக பிரபந்தம் - அதிகாரசங்கிரகம்

‡ஆராத அருள் அமுதம் பொதிந்த கோயில்⋆
அம்புயத்தோன் அயோத்தி மன்னற்களித்த கோயில்⋆
தோலாத தனி வீரன் தொழுத கோயில்⋆
துணையான வீடணற்குத் துணையாம் கோயில்⋆
சேராத பயன் எல்லாம் சேர்க்கும் கோயில்⋆
செழு மறையின் முதல் எழுத்துச் சேர்ந்த கோயில்⋆
தீராத வினை அனைத்தும் தீர்க்கும் கோயில்⋆
14 திருவரங்கம் எனத் திகழும் கோயில் தானே (42)

॥ திருவயோத்திமன்னன் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com